திருவண்ணாமலை மாநகரில், தூய்மை அருணை அமைப்பின் சார்பில் நடைபெற்று வரும் பணிகளை முன்னாள் பொதுப்பணித்துறை அமைச்சரும், தூய்மை அருணை அமைப்பாளருமான எ.வ.வேலு பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மேற்பார்வையாளர்கள் இரா.ஸ்ரீதரன், ப.கார்த்திவேல்மாறன், பிரியா விஜயரங்கன் உட்பட பலர் உள்ளனர்.

திருவண்ணாமலை மாநகரத்தில்

'தூய்மை அருணை' பணிகள் - முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு!

மரக்கன்றுகள் பராமரித்தலை தீவிரப்படுத்த ஆலோசனை!

திருவண்ணாமலை, மே 19 -

திருவண்ணாமலையில் வாரந்தோறும் நடைபெறும் தூய்மை அருணை பணிகளை முன்னாள் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மரக்கன்றுகளை பராமரித்தலை தீவிரப் படுத்த ஆலோசனை வழங்கினார்.

திருவண்ணாமலையில் தொண்டு செய்வோம், துணை நிற்போம் என்ற முழக்கத்தோடு கடந்த 7 ஆண்டுகளாக முன்னாள் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களை அமைப்பாளராகக் கொண்டு, தூய்மை அருணை திட்டம் செயல்பட்டு வருகிறது.

தூய்மை அருணை திட்டத்திற்கு 4 மேற்பார்வையாளர்களும், 39 வார்டுக்கு 39 ஒருங்கிணைப்பாளர்களும், மாட வீதி தூய்மைப் பணிக்கு 7 ஒருங்கிணைப்பாளர்களும் ஒவ்வொரு வார்டுக்கும் 25 தூய்மைக் காவலர்கள் என ஆயிரக் கணக்காணோர் மரம் நடுதல், பராமரித்தல், கால்வாய் மற்றும் தூர்வாருதல் என செயல்பட்டு வருகின்றனர்.

கிரிவலப்பாதையில் உள்ள 20 குளங்களை தூய்மை அருணை அமைப்பு மற்றும் மாவட்ட நிர்வாகம் சார்பில் சீரமைப்பது என தீர்மானிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது.

இதனைத் தொடர்ந்து, தூய்மை அருணை அமைப்பும், அருணை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையும் இணைந்து, கர்ப்பிணி தாய்மார்களுக்கு வளைகாப்பு நிகழ்ச்சி மாதந்தோறும் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டு, முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் ஜூலை 16 அன்று தொடங்கி வைத்தார்கள். இது மாதந்தோறும் நடைபெற்று வருகிறது.

17.05.2026 - ஞாயிற்றுக் கிழமை அன்று காலை 7.00 மணிக்கு, திருவண்ணா மலை மாநகரில் நடைபெறும் தூய்மைப் பணிகள், நடப்பட்ட மரக்கன்றுகளை பராமரிக்கும் பணி ஆகியவற்றை முன்னாள் பொதுப்பணித் துறை அமைச்சரும், தூய்மை அருணையின் அமைப்பாளருமான எ.வ.வேலு அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

காலை 7.00மணிக்கு வார்டு எண்32, மற்றும் வார்டு 27 தேனிமலை சுற்றியுள்ளப் பகுதிகளில் மண்மேடுகள், கால்வாய் அடைப்பு, மரக்கன்றுகள் பராமரிப்பதை பார்வையிட்டு, முன்னாள் பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் பார்வையிட்டு ஆலோசனைகளை வழங்கினார்.

காலை 7.30மணிக்கு, வார்டு எண்.30 கோரிமேட்டுத் தெருவில் உள்ள நடைபெற்று வரும் கால்வாய் அடைப்பு,

காலை 7.45மணிக்கு, வார்டு எண்.31 மற்றும் வார்டு.33 அண்ணா நகர் பகுதியில் செடிகள் நிரம்பிய புதர்கள் மற்றும் கால்வாய் தூர்வரும் பணியினை பார்வையிட்டும், காலை 8.00மணிக்கு, வார்டு எண்.36 கல் நகரில் நடைபெறும் கால்வாய் அடைப்பு தூய்மைப் பணிகள்,

காலை 8.15மணிக்கு, வார்டு எண்.37, கோபால் தெருவில் நடைபெறும் கால்வாய் சுத்தப்படுத்து தல், மரம் நடுதல்,

காலை 8.30 மணிக்கு, வார்டு எண்.38, ஆடுதொட்டித் தெருவில் நடைபெறும் வரும் தூய்மை பணி மற்றும் கால்வாய் தூர்வாரும் பணியினை பார்யிட்டு ஆய்வு செய்தார்.

காலை 8.45மணிக்கு, வார்டு எண்.39, வேல் நகரில் நடைபெறும் தூய்மை அருணை பணி மற்றும் மரக்கன்றுகள் பராமரித்தலை ஆய்வு செய்தார்.

ஒவ்வொரு வார்டிலும் ஆய்வு செய்த முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு அங்கு தூய்மை பணியில் ஈடுபடும் மாணவர்கள் மற்றும் பெண்களிடம் நலம் விசாரித்து, அவர்களை ஊக்கப்படுத்தினார் .

தூய்மைப் பணியில் தூய்மை அருணையின் மேற்பார்வையாளர்கள் இரா.ஸ்ரீதரன், ப.கார்த்திவேல்மாறன், ப்ரியா ப.விஜயரங்கன், இல.குணசேகரன், ஒருங்கிணைப்பாளர்கள் அ.கோவிந்தன், செ.எழில்மாறன், ஏ.ஏ. ஆறுமுகம், ம.வினோத்குமார், எஸ்.கே.டி.வீரா, வழக்கறிஞர்கள் ம.செந்தில், கிருஷ்ணமூர்த்தி, பா.அரி கிருஷ்ணன், வழக்கறிஞர் ந.சீனுவாசன், இரா.அருண், மெட்ராஸ் கே. சுப்பிரமணி, காலேஜ் கு.ரவி, கே.காளிதாஸ், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம், பி.ஆர். நாகராஜ், கு.குமார், மண்டி. பிரகாஷ், மு.கருணாமூர்த்தி, இரா.ராஜாமணி, அ.திவாகர், அ.பழனி, கே.பிரகாஷ், பி.ஜி. முருகன், கோபி.சங்கர், சென்னை.சுரேஷ், முபாரக், லயன்.ஷெரீப். கா.ஏழுமலை, எஸ்.ஜாகீர், இரா.ஜோதி, கு. தியாகு, மூ.காமேஷ், ஹக்கிம் சேட், சி.கே.சசிக்குமார், கோல்டு எஸ்.பிரபு மற்றும்

மாட வீதி ஒருங்கிணைப்பாளர்கள் இல.குணசேகரன், சினம்.பெருமாள், ஆர்.கே.பி. பாஸ்கர், ஜீவரேகா விஜயராஜ், அருணை வெங்கட் உட்பட ஆயிரக்கணக்கான தூய்மைக் காவலர்களும் கலந்து கொண்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள்

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் முழுவதும் நல உதவிகள் - இனிப்பு வழங்கல்!

மாவட்டப் பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் சிறப்புரை!

திருவள்ளூர், மே 19 -

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் அவசர செயற்குழு ஆலோசனைக் கூட்டம் திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் வல்லூரில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன் தலைமையில் நடைபெற்றது.

இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் எல்லாபுரம் ஜெ.மூர்த்தி, மாவட்ட நிர்வாகிகள் கே.வி.ஜி. உமாமகேஸ்வரி வேணு, எம்.எல்.ரவி. எஸ். ரமேஷ் மாநில நிர்வாகிகள் சி.எச்.சேகர், கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், வெ.அன்புவாணன். ஏ.கே.சுரேஷ், பொதுகுழு உறுப்பினர்கள் கே.சுப்பிரமணி, பா.செ.குணசேகரன், பி. வெங்கடாசலபதி. ஏ.வி.ராமமூர்த்தி, டாக்டர் பரிமளம் விஸ்வநாதன். ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் மாவட்ட கழகப் பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனை வழங்கினார். அப்போது பேசிய அவர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராக தேர்ந்தெடுத்த கழகத் தலைவர் அவர்களுக்கு திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம். இளைஞர்களின் அரசியல் பங்களிப்பை மேலும் வலுப்படுத்தும் என்பதில் எங்களுக்கு முழு நம்பிக்கை உள்ளது.

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் திமுகவிற்கு சுமார் ஒன்றரை கோடி வாக்காளர்கள் ஜனநாயகக் கடமையை உணர்ந்து வாக்களித்துள்ளனர். வாக்களித்த அனைத்து வாக்காளர்களுக்கும் இக்கூட்டத்தின் வாயிலாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஜூன் 3 பிறந்த நாள் விழாவை முன்னிட்டு, திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் முழுவதும் கழகக் கொடி யேற்றி, பொதுமக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கி, சமூகப் பணிகள் மேற்கொண்டு சிறப்பாகவும் எழுச்சியுடனும் கொண்டாடிட அனைத்து கழக நிர்வாகிகள், உறுப்பினர்கள் மற்றும் தொண்டர்கள் அனைவரும் ஒற்றுமையுடன் செயல்பட அன்புடன் கேட்டுக்கொள்ளப் படுகிறது.

கோடை வெப்பத்தை தணிக்கும் வகையில், திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் உட்பட்ட பகுதிகளில் கழக நிர்வாகிகள் பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு தண்ணீர் பந்தல்கள் அமைக்கப்பட வேண்டும்.

எதிர்வரும் உள்ளாட்சி மன்றத் தேர்தலில் நமது கழக வேட்பாளர்கள் 100 விழுக்காடு வெற்றி பெறும் வகையில், அனைத்து கழக நிர்வாகிகளும் முழு ஒற்றுமையுடனும் அர்ப்பணிப்புடனும் செயல்பட்டு வெற்றியை உறுதி செய்யுமாறு இக்கூட்டத்தின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறோம்.

"கடந்த காலங்களில் ஏற்பட்ட பல இக்கட்டான அரசியல் சூழ்நிலைகளில், காங்கிரஸ் கட்சிக்கு திராவிட முன்னேற்றக் கழகம் உறுதுணையாக இருந்ததுடன், 2019 நாடாளுமன்றத் தேர்தலில் ராகுல் காந்தியை பிரதமர் வேட்பாளராக முதன்முதலில் முன்மொழிந்த வரும் கழகத் தலைவர் தளபதி அவர்கள் தான்.

ஆனால் அரசியல் நாகரிகத்தை பின்பற்றாமல், வெற்றி வாய்ப்பை கூட்டணியில் இழந்தவுடன் தவெக.வுக்கு அவசரமாக சென்று ஆதரவு கடிதம் வழங்கியிருப்பது முற்றிலும் சந்தர்ப்பவாத அரசியலின் வெளிப்பாடாகும். இந்த செயலை திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக வன்மையாக கண்டிக்கிறது."

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

இதில் ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் டி.கே.சந்திரசேகர். மு.மணிபாலன், ஆ.சத்திய வேலு, நா.செல்வசேகரன், ஜான்பொன்னுசாமி, மு.முரளி தரன், ஆ.ராஜா, வே.ஆனந்தகுமார், க.சு.ஜெகதீசன். ஜி.ரவிக்குமார். அபிராமிகுமரவேல். இரா.அறிவழகன். பி.முத்து, க.சு.தமிழ்உதயன், ருக்குமணி மோகன் ராஜ், அப்துல் ரஷீத், மோகன் ராஜ், பா.து.தமிழரசன், மற்றும் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் கே.வி. லோகேஷ், என்.கிருஷ்ணமூர்த்தி, ஜி.பி.வெங்கடேசன், முகமதுஅலவி, கே.ராஜேஷ், இரா.தனசேகரன், வி.பி.ரவிக்குமார், ஏ.கே.சம்பத் குமார், பாஸ்கர், தேசராணி , ஜெயலிதா, சுமன், ரமேஷ், கோபி, வில்சன், மு.தினகரன், எம்.டி. ஜி.கதிர்வேல், மா.தீபன், ஆர். ராமமூர்த்தி, டி.சுதாகர், பெரியப்பாளையம் கார்த்திக், உள்பட திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் அவசர செயற்குழு ஆலோசனைக் கூட்டம் வல்லூரில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் மு.பகலவன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்எஸ்கே ரமேஷ் ராஜ் பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார். இதில்தலைமைசெயற்குழு உறுப்பினர் எல்லாபுரம் ஜெ.மூர்த்தி, மாவட்ட நிர்வாகிகள் கே.வி.ஜி. உமாமகேஸ்வரி வேணு, எம்.எல்.ரவி, எஸ்.ரமேஷ், மாநில நிர்வாகிகள் சி.எச்.சேகர், கே.ஜி.பாஸ்கர்சுந்தரம், வெ.அன்புவாணன், ஏ.கே. சுரேஷ், பொதுகுழு உறுப்பினர்கள்க கே.சுப்பிரமணி, பா.செ.குணசேகரன், பி.வெங்கடாசலபதி, ஏ.வி.ராமமூர்த்தி, டாக்டர் பரிமளம் விஸ்வநாதன் உள்பட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் திமுக நிர்வாகிகள் உள்ளனர்

திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருநின்றவூர் பஜார் பகுதியில் ஆவடி சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்ட மாவட்ட கழக செயலாளர், முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் உதயசூரியன்சின்னத்திற்கு வாக்களித்த பொதுமக்களுக்கு நன்றிகளை தெரிவித்துக் கொண்டார். உடன்நகரச் செயலாளர் தி.வை.ரவி, மாவட்ட நிர்வாகிகள் கே.ஜெ.ரமேஷ், மா.இராஜி, டி.முரளிகிருஷ்ணன், எஸ்.மூர்த்தி, இளைஞர் அணி கே.சுரேஷ்குமார், வே.தியாகராஜன், அன்பழகன், சி.கமலக்கண்ணன், பாபு, பெ.வினோத், எம்.மோகன், பி.எல்.ஆர்.யோகா, சலீம், கோடீஸ்வரன், அசோக்குமார், தங்கராஜ், வெங்கடேசன், சரவணன், ஏகாம்பரம், சுரேஷ், கோபால், சதாசிவம், மாதவன், மு.பெ.மகேஷ் குமார், செந்தில்வேல், ஜிசிசி.கருணாநிதி, பரமசிவம் முனிரத்தினம், மு.பெ.சசிகுமார், சுகுமார், ஜீவானந்தம், பாபு, பூமணி, சதாசிவம், சுதர்சனம், பட்டாணி கார்த்தி, பிரசன்னா, ரமேஷ் துரையரசன், வீ.மகேஷ்குமார், தயாநிதி, மற்றும் திமுக நிர்வாகிகள் தோழமைக் கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

மக்களுக்காக உழைத்த தலைவருக்கு தோல்வி அல்ல; மக்களுக்குத்தான் தோல்வி!

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாளை எழுச்சியுடன் கொண்டாடுவோம்!

மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம் - மாவட்டச் செயலாளர் க.சுந்தர் அறிவிப்பு!

காஞ்சிபுரம், மே 19 -

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம் உத்திரமேரூர் பிரியா மஹாலில் நேற்று முன்தினம் (ஞாயிற்றுக் கிழமை) காலை கழக அவைத் தலைவர் ச.இனியரசு தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் அனைவரையும் வரவேற்று பேசினார்.

இதில் மாவட்ட கழக நிர்வாகிகள் ஓ.எஸ்.தினகரன், க.செல்வம் எம்.பி, திருமதி மலர்விழி குமார், சன் பிராண்டு ஆறுமுகம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் சி.வி.எம்.பி.எழிலரசன், ஆர். டி.அரசு, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் என்.ஆர்.நாராயணன், எஸ். ஆர்.அப்பாதுரை, மாநகர செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன், மாநில நெசவாளர் அணி ஜி.சுகுமாரன், மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் வி.எஸ்.ராமகிருஷ்ணன், காஞ்சிபுரம் மேயர் திருமதி மகாலட்சுமி யுவராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் வெளிக்காடு ஏழுமலை, எஸ்.உசேன், எஸ்.கே. ராஜேந்திரன், பொன் சசிகுமார், நகர செயலாளர் கே.குமார், ஒன்றிய செயலாளர்கள் கெ.ஞானசேகரன், பி.எம். குமார், க.குமணன், டி.குமார், பொன் சிவகுமார், பி.எம்.பாபு, சத்ய சாய், கே.கண்ணன், ஜி. தம்பு, டிவி கோகுல கண்ணன், ஏழுமலை, சிற்றரசு, எம்.எஸ்.பாபு, சரவணன், கே.எஸ்.ஆர்.கார்த்திகேயன், மதுராந்தகம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்ட கழக வேட்பாளர் திருமதி அமலு பொன்மலர், பகுதி செயலாளர்கள் எஸ். சந்துரு, சு.வெங்கடேசன், அ.தசரதன், கே.திலகர்,

பேரூர் செயலாளர்கள் மாவட்டம் என்.எஸ்.பாரிவள்ளல், ஆ.சுந்தரமூர்த்தி, மோகன் தாஸ், வி.எழிலரசன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் அ.யுவராஜ், குணசேகரன், ஆ.செல்வி, வ.மலர்மன்னன், பா.கார்த்திகேயன், எஸ். மாலதி, சி.ராதாகிருஷ்ணன், அப்துல்நபில், பாரத், தெய்வசிகாமணி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் பெ. மணி, டி.சஞ்சய் காந்தி, அண்டோ சீரில் ராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நிறைவாக மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் தீர்மானங்களை விளக்கிப் பேசினார்.

இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு :

தீர்மானம் 1

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்களுக்கு வாக்களித்த பொதுமக்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை இக்கூட்டம் தெரிவித்துக் கொள்கிறது. மேலும் தேர்தல் பணியாற்றிய கூட்டணி கட்சிகள், விடுதலை சிறுத்தை, கம்யூனிஸ்ட் கட்சிகள், இந்திய யூனியன் முஸ்லிம் லீக், உள்ளிட்ட கூட்டணி கட்சிகளுக்கு நன்றியையும். அதே நேரத்தில் நன்றி கூட சொல்லாத காங்கிரஸ்க்கு கண்டனத்தையும் இக்கூட்டம் தெரிவித்துக் கொள்கிறது.

தீர்மானம் 2

தி.மு.கழகம் பல வெற்றி தோல்விகளை கண்ட இயக்கம் வெற்றி என்பதை விட தோல்வியில் தான் தி.மு.கழகம் உயிர்ப்புடன் செயல்பட்டு பீனிக்ஸ் பறவை போல் மீண்டும் வீறு கொண்டு எழும் என்பதினால் நமது கழகத் தோழர்கள் தோல்வியைக் கண்டு துவண்டுவிட வில்லை. மீண்டும் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.கழகம் மக்கள் பணியில் தீவிரமாக ஈடுபடுவோம் என்பதினை இக் கூட்டம் உறுதிபட தெரிவித்துக் கொள்கிறது.

தீர்மானம் 3

கழகத் தலைவர் தளபதி அவர்கள் கொளத்தூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி வாய்ப்பை இழந்து விட்டாலும் நம்மை தேற்றக்கூடிய வகையில் அவர் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் நமது நெஞ்சில் ஆழமாக பதிந்துவிட்ட ஒன்றாகும்.

வெற்றி பெற்றால் அவ் வெற்றிக்கு தான் காரணம் என்பதினைப் போல தோல்விக்கும் நானே பொறுப் பேற்றுக் கொகிறேன் என்று கூறிய வார்த்தைகள் வேறு எந்த தலைவரும் கூறிடாத வார்த்தை, கழகத் தலைவரின் நெஞ்சுறுதி நம்மையெல்லாம் வியக்க வைக்கிறது. அவரது உறுதிமிக்க சொற்கள் நம் பணிக்கு மேலும் உற்சாகம் ஊட்டக் கூடிய வகையில் அமைந்திருக்கிறது அவரது சொற்களை நெஞ்சில் ஏந்தி நாம் தீவிரமாக களப் பணி ஆற்றுவோம் என்பதினை இக் கூட்டம் உறுதிபட தெரிவித்துக் கொள்கிறது.

தீர்மானம் 4

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் தி.மு.கழகம் பெரும்பாலான இடங்களில் வெற்றி வாய்ப்பை இழந்து விட்டது என்று நினைத்து பார்க்கவே முடியவில்லை. கடந்த 5 ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட மக்கள் நலத் திட்டங்கள் எத்தனை எத்தனை? கழகத் தலைவர் அவர்களின் சீரிய சிந்தனையில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் இன்றைக்கு இந்தியா முழுவதும் விரிவுபடுத்தப்பட்டு பல்வேறு மாநிலங்களில் நிறைவேற்றப்பட்டுக் கொண்டு இருக்கின்றன என்ற பெருமை கழகத் தலைவர் அவர்களுக்கு உண்டு. மீண்டும் ஒரு முறை நமது கழகத் தலைவர் தலைமையில் ஆட்சி அமைந்திருக்குமேயானால் மேலும் தமிழ்நாடு வளர்ச்சி பெற்று இருக்கும், தமிழ் நாட்டு மக்கள் மேலும் வளர்ச்சி அடைந்து இருப்பார்கள். தலைவர் அவர்கள் தலைமையிலான தி.மு.க. கூட்டணிக்கு மக்கள் வாக்களிக்கத் தவறி விட்டார்கள். மக்களுக்காக உழைத்த தலைவருக்கு இது தோல்வி அல்ல, மக்களுக்கான தோல்விதான் இது என்பதினை இக் கூட்டம் தெரிவித்துக் கொள்கிறது.

தீர்மானம் 5

தமிழ்நாட்டில் திராவிட இயக்கத்தை தோற்றுவித்த டாக்டா சி. நடேசனார், டாக்டர் டி.எம். நாயர், சர் பிட்டி தியாகராயர் போன்றோர் வழியில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா கொள்கைகளை நமக்கு போதித்த பெருந் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாள் ஜூன் 3 ஆம் தேதி ஆகும். தமிழ்நாடு முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைத்திட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தீட்டிய திட்டங்கள் ஒன்றா இரண்டா கைரிக்ஷா ஒழிப்பு, இரவலர் மறுவாழ்வு, கண்ணொளி வழங்கும் திட்டம், விவசாயிகளுக்கு முதன் முதலாக இலவச மின்சாரம், பெண்கள் முன்னேற்றத்திற்கு எண்ணற்ற திட்டங்கள், சொத்தில் சமஉரிமை, மகளிர் சுய உதவிக் குழுக்கள், திருமண நிதி உதவித் திட்டம், கருவுற்ற பெண்களுக்கு நிதி உதவித் திட்டம், அரசு வேலைவாய்ப்பில், உள்ளாட்சியில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு, ஏழை விவசாயிகளுக்கு இலவச நிலம், கலைஞர் மருத்துக் காப்பீடு திட்டம், இலவச கலர் டி.வி. உயர்கல்வி வரை இலவச கல்வி மருத்துவம் பெறியியல் படிப்புகளுக்கு நுழைவுத் தேர்வு ரத்து, அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்று இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம்.

அது மட்டுமா, நமது தமிழ்நாட்டு மக்களுக்கு தேவையான திட்டங்களை, உழைப்பை நல்கிட நமக்கு அவர் வடித்தெடுத்த முத்து வேல் கருணாநிதி ஸ்டாலின் வழியில் உதயநிதி ஸ்டாலின் என்று இரு உழைப்பாளிகளை மக்களுக்கு சேவையாற்ற நமக்கு வழங்கி இருக்கிறார். இதனை விட திராவிட இயக்கம் என்ற தி.மு.கழகத்தின் பேரியக்கத்திற்கு வேறு என்ன வேண்டும். அப்பேர்பட்ட திராவிட இயக்க பெருந்தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான ஜூன் 3 ஆம் தேதி அன்று காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் முழுவதும் கழகக் கொடி ஏற்றி அறுசுவை உணவு வழங்கி ஏழை எளிய மக்களுக்கு பல்வேறு நல உதவிகளை வழங்கி மிக எழுச்சியுடன் கொண்டாடுவோம் என்று இப் பொது உறுப்பினர்கள் கூட்டம் தீர்மானம் நிறைவேற்றப்படு கிறது.

தீர்மானம் 6

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாளை காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் முழுவதும் இனிப்பு அறுசுவை உணவு நல உதவிகள் வழங்கி எழுச்சியுடன் கொண்டாடுவோம்!

இவ்வாறு மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றி மாவட்டச் செயலாளர் க.சுந்தர் அறிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் உத்திரமேரூர் தனியார் திருமண மண்டபத்தில் மாவட்ட கழக அவைத் தலைவர் ச.இனியரசு தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். உடன் மாவட்ட கழக நிர்வாகிகள், ஓ.எஸ்.தினகரன், க.செல்வம் எம்.பி., திருமதி. கு.மலர்விழி, சன் பிராண்ட ஆறுமுகம் உள்ளிட்ட மாநகர நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் செயலாளர்கள் கலந்து கொண்டனர்.